எத்தனை பயணிகள் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு வந்தார்களோ, அத்தனை பயணிகளுக்கும் சிறப்புப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகள்மூலம் மக்கள் சொந்த ஊருக்குச் சென்று வந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த வழித்தடங்களில், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

264—

மாணவர் விடுதி

***27895—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர் விடுதி

துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை சில நாட்களுக்கு முன் இம்மாமன்றத்தில் துணைக் கேள்வியாகக் கேட்டிருந்தார்கள். அங்கு இருக்கின்ற அவசர, அவசியத்தைக் கருதி, அங்கே விடுதிகள் துவக்குவதைக் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மகத்தான சக்தி, மாட்சிமை பொருந்திய தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதி 30-க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க வேண்டுமானால், 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அந்தியூரில் உள்ள அரசு விடுதியில் தங்கித்தான் படிக்க வேண்டும். பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இந்த விடுதிக்கு வருவதால், மலைக் கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்களுக்குப் போதிய இடம் கொடுக்க முடியவில்லை. எனவே, கல்வித் துறையிலே தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) கனிவுடன் பரிசீலித்து, பர்கூர் மலைப் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று ஒப்பற்ற பொற்கால ஆட்சியை அளித்து வருகின்றார்கள். குறிப்பாக, கல்வித் துறையில், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற மிகக் குறுகிய காலத்தில், 23 மாதங்களுக்குள் 56 விடுதிகளைப் புதிதாகத் திறப்பதற்கு ஆணையிட்டு, இன்று அனைத்து விடுதிகளும் துவக்கப்பட்டுள்ளன. சென்ற ஆட்சிக் காலத்தில் அந்த 56 விடுதிகளிலும் 50 மாணவர்கள் அல்லது மாணவியர்களை தங்க வைத்தார்கள். ஆனால், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி, ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவர்கள் அல்லது மாணவியர்கள் தங்கிப் படிக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள மாணவ, மாணவியர்கள் கல்வி கற்பதற்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, விடுதிகளில் வசதிகளைக் கொடுப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவற்றை ஆரம்பிப்பதற்கு ஆணையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி, அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் விடுதி கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*